மலர்:20 இதழ்: 3
மார்ச் – 2020
Date of Publication
25th day of Every month
தனிப்பிரதி விலை : ₹ 15/–

செங்குந்த மித்திரன்

2020 - 2023
தலைமைச் சங்க புதிய நிர்வாகிகள்

செங்குந்தர் உறுதிமொழி

நாம் செங்குந்த குலக்கடவுள் அருள்மிகு முருகப்பெருமான் ஆணையாக, மனசாட்சியுடன் கீழ்க்கண்டவாறு உறுதி பூணுகிறோம்.

1. நாம் இந்தியக் குடிமக்களாய் இருப்பதை, பெருமையாகக் கருதுகிறோம். நமது நாட்டின் அரசியல் அமைப்புச் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, நாட்டின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடுவோம்.
2. நாம், செங்குந்தர் என்ற உணர்வுடன் ஒன்றுபட்டு, நமது சங்கத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு சமூக, பொருளாதார, கல்வி, தொழில், கலாச்சார முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம். சமூக நலம் காப்போம்.
3. நாம் மற்ற இனத்தவரிடம், மனித நேயம் கொண்டு, நட்புடனும், அன்புடனும் பழகுவோம்.
4. நாம், நமது உரிமைகளைப் பாதுகாக்க எப்பொழுதும் விழிப்புடன் செயல்படுவோம்.
5. நாம் நமது சங்கம் நிறுவிய சான்றோர்களை நினைவில் கொண்டு, சங்கத்தை நாளும் வளர்த்திடுவோம்.

தலைவர் மடல்

போலியான தோற்றத்தையும், பொய்யுரைகளையும் புறந்தள்ளி, பாலிலிருந்து நீரைப் பிரித்தெடுப்பதில் வல்லமை பெற்ற அன்னத்தைப்போலச் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்த செங்குந்த சொந்தங்களுக்கு வணக்கம்.

விடாமுயற்சியும் கடின உழைப்பும் ஒன்று சேர்ந்தால் வெற்றியைத் தவிர வேறு எதுவும் கிடைக்காது.

வெற்றி என்பது லட்சியத்தைப் படிப்படியாக புரிந்து கொள்வதாகும்.

எந்த ஒரு நிலையிலும் வாழ்க்கையில் வெற்றி பெற 'தகுதி' தேவை.

தன்னம்பிக்கை
குறிக்கோள்
திட்டமிடல்

நடந்து வந்த பாதைகளெல்லாம்
கல்லும் முள்ளும்தான்
நடக்கின்ற பாதைகளும்
கரடுமுரடுதான்
நடக்கப்போகும் பாதைகளும்
புதிய பாதைகள்தான்

நம்பிக்கை ஒன்றே நம் வழிமுறை.
சாதனைகள் மட்டுமே நம்மை நிலைநிறுத்தும்.
என்மீது நம்பிக்கை வைத்து தொடர்ந்து மூன்றாவது முறையாக தேர்ந்தெடுத்தமைக்கு நன்றி ! நன்றி ! நன்றி !

அன்புடன்

KPK செல்வராஜ்

தேப்பெருமாநல்லூர் அருள்மிகு வேதநாயகி உடனமர் அருள்மிகு விஸ்வநாத சுவாமி

தேப்பெருமாநல்லூர் அருள்மிகு விஸ்வாத சுவாமி ஆலயம்

தஞ்சை மாவட்டம், கும்பகோணத்திலிருந்து திருநாகேஸ்வரம் வழியாக சுமார் 7 கி.மீ. தொலைவில் தேப்பெருமாநல்லூரில் அமைந்துள்ள அருள்மிகு வேதநாயகி உடனமர் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி திருக்கோயில் பல அதிசயங்களைக் கொண்ட தலமாக விளங்குகிறது.

மீண்டும் பிறவாத நிலையை அடைவதே உயிர்களின் குறிக்கோள் என்பர் பெரியோர். அத்தகைய பேரின்ப நிலையை அருளும் தலமாக விளங்குகிறது தேப்பெருமாநல்லூர்.

புராண காலத் தொடர்புடைய இத்தல இறைவனை வணங்குவோருக்கு மறுபிறவி இல்லை என்று சொல்லப்படுகிறது.

யாருக்கு மறுபிறவி இல்லையோ அவர்கள்தான் இக்கோவிலுக்கு வரமுடியும்; சுவாமியைத் தரிசிக்க முடியும் என்று சொல்கிறார் ஆலய குருக்கள்.

வருடத்தின் அனைத்து நாட்களும் சூரிய ஒளி சிவன் மீது விழும் அதிசய கோவில் இது. இத்தல இறைவனை பிரதோஷம் அன்று தரிசிப்பது ஆயிரம் மடங்கு புண்ணியம் தரும்.

தலவரலாறு

ஈசனை சனிபகவான் ஏழேகால் நாழிகை பிடிக்கவேண்டிய சமயம் வந்தபோது, அதைக் கூறவந்த சனிபகவான் அம்பாளிடம், ""நாளை காலை ஏழேகால் நாழிகைப் பொழுதில் ஈசனைப் பிடிக்கப் போகிறேன்'' என்று கூறிவிட்டு சென்றார். மறுநாள் சனி வரும் நேரம், அம்பிகை ஈசனைக் காப்பாற்ற எண்ணி அவரை அருகிலிருந்த அரச மரத்தின் பின் ஒளிந்து கொள்ளச் சொன்னார். ஈஸ்வரனும் அப்படியே செய்தார்.

சனி பகவான் அங்கு வந்து மரத்திற்கு அருகில் இருக்கும் அம்பாளைப் பார்த்ததும் ஈஸ்வரன்

இங்கேதான் இருக்கிறார் என்பதைப் புரிந்துகொண்டு, மரத்தைப் பார்த்த வண்ணம் அங்கேயே ஏழேகால் நாழிகை அமர்ந்து கொண்டார். நேரம் கழிந்ததும் அங்கிருந்து எழுந்து மெதுவாக நடந்தார் சனிபகவான். அப்போது அம்பாள் சனி பகவானைப் பார்த்து, "என்ன, ஈஸ்வரனைப் பிடிக்க முடியாமல் தோல்வி அடைந்து திரும்பிச் செல்கிறாயா?'' என்று கேட்டார்.

சனி பகவான், "நான் வந்த வேலை வெற்றியுடன் முடிந்தது. என் பார்வையில் ஈஸ்வரனே அரச மரத்தின் பின்புறம் ஒளிந்திருந்த ஏழேகால் நாழிகை நேரமே நான் அவரைப் பிடித்திருந்த நேரம்'' என்று ஆணவத்துடன் சொல்லிவிட்டு, ஒய்யாரமாக இடுப்பில் இடக்கை வைத்து நின்றார். சனி சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த ஈஸ்வரன் அரச மரத்தின் பின்புறத்திலிருந்து கோபத்தோடு வெளிப்பட்டு, மகா மந்திர பைரவர் அவதாரம் எடுத்து சனி பகவானை இரண்டாகக் கிழித்தார்.

இரண்டாகக் கிழிக்கப்பட்ட சனி பகவான் சிவபெருமானை நோக்கி, "ஈஸ்வரா! தாங்கள் வகுத்துக் கொடுத்த சட்டப்படிதான் நான் இயங்குகிறேன். நான் இல்லையேல் பூலோகவாசிகள் தங்கள் விருப்பப்படி மிகுந்த ஆணவத்துடன் செயல் படுவர். இதனால் உலகில் ஆணவக் காரர்களும் அக்கிரமம் செய்பவர்களும் பெருகி விடுவார்கள். எனவே, ஆணவத்தோடு நான் நடந்து கொண்டதற்காக என்னை மன்னித்து, மீண்டும் முன்புபோல் செயல்பட அருள்புரிய வேண்டும்'' என்று வேண்டினார்.

அவர் வேண்டுதலை ஏற்று இரு கூறான உடலை ஒன்று சேர்த்து அருள் புரிந்தார் ஈசன். இவ்வாறு ஆணவம் நீங்கிய இத்தல சனி பகவானை வணங்கினால் சனி தோஷங்கள் விலகும் என்பதும் ஐதீகம்.

மகாமந்திர பைரவராக உக்கிரமாகக் காட்சி தந்த ஈஸ்வரனுக்கு, நான்கு வேதங்களைச் சொல்லி அவர் கோபத்தைத் தணித்தாள் அம்பிகை. அம்பாளின் அருட்பார்வையால் கோபம் தணிந்தார் ஈஸ்வரன். இதனால் இக்கோயில் அம்பாள் வேதாந்த நாயகி என்று பெயர் பெற்றார்.

சனி பகவானை இரண்டாகக் கிழித்த பாவம் ஈசனைப் பிடித்துக்

கொண்டதால் அதனைத் தீர்க்க பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களை ஒருசேர தரிசிக்க வேண்டும் என்ற பரிகாரத்தை நிறைவேற்ற, ஈசன் 12 ஜோதிர்லிங்க பரமேஸ்வரர்களையும் இத்திருத்தலத்திற்கு வரவழைத்தார்.

இவர்களில் ஒருவர் வந்தாலும் எத்தகைய பாவங்களும் சாபங்களும் தோஷங்களும் நீங்கிவிடும். அப்படி யிருக்க பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களும் தரிசனம் கொடுத்த புண்ணிய தலம் இதுவென்பதால், ஏழேழு ஜென்மங்களில் புண்ணியம் செய்தவர்களும், மறுபிறவி இல்லா தவர்களும்தான் இங்கு வந்து தரிசிக்க முடியும் என்று கூறப்படுகிறது.

கோவில் அமைப்பு

மிகவும் பழமையானது இத்திருக் கோவில். ஆகம விதிக்கு முற்றிலும் மாற்றாக அமைக்கப் பட்டுள்ளது. இங்கு எழுந்தருளியிருக்கும் தெய்வங்கள் அனைத்தும் மாறுபட்ட கோலத்திலேயே காட்சி தருகின்றனர். இதனை பேதம் என்றும் சொல்வர்.

கிழக்கு நோக்கிய கோயில். பிரதான வாயில் கருவறையின் பின்புறம் உள்ளது. அதன் நேர் எதிரில் கருவறையின் பின்புறம் விநாயகர் உள்ளார். கன்னி மூலையில் அமைந்துள்ள இவருக்கு கபால விநாயகர் என்று பெயர். தனிச்சந்நிதி உள்ள இவரை வழிபட சகல பாவங்களும் நீங்கி, எடுத்த காரியம் முழு வெற்றி பெறும்.

ஸ்ரீ விஸ்வநாத சுவாமி

ஈசன் லிங்க ரூபத்தில் காட்சியளிக் கிறார். இக்கோவிலின் கர்ப்பகிரகம் மட்டும் தேன் கலந்த சுண்ணாம்பால் கட்டப்பட்டது என்று வரலாறு

சொல்கிறது. தினமும் காலையில் சூரிய பகவானின் ஒளிக்கதிர்கள் சிவலிங்கத்தின் மீது படுகிறது. அதற்குப் பின்தான் காலை ஏழு மணி அளவில் கோவில் திறக்கப்படுகிறது.

ருத்ராட்ச கவசம்

இத்தலத்தில்தான் மகரந்த ரிஷி நந்தி அளித்த யாழி (சிங்க) முக சாபம் நீங்க அனுதினமும் ஒவ்வொரு வகை மலரால் 50 வருடங்கள் பூஜை செய்தார் என்றும், அப்படி பூஜை செய்தும் தரிசனம் தராத இறைவன் அவர் கழுத்திலிருந்த ருத்ராட்ச மாலை அறுந்து லிங்கத்தின் மீது விழுந்தபோது, காட்சி கொடுத்து சாப விமோசனம் அளித்தார். அதனால்தான் இத்தல இறைவனுக்கு ருத்ராட்ச கவசம் சாற்றப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

இருபத்தியிரண்டாயிரம் ருத்ராட்ச மணிகளைக் கொண்டு ஆவுடை, பாணம், நாக படம் அமைத்து கவச மிடப்படுகிறது. ருத்ராட்ச கவசத்தை பிரதோஷம், சிவராத்திரி, மாத சிவ ராத்திரி மற்றும் சிவனுக்குரிய சிறப்பு நாட்களில் அணிவிக்கிறார்கள். இது போன்ற ருத்ராட்ச கவசம் அணிந்த

மேனி உள்ள இறைவனை எங்கும் தரிசிக்க முடியாது என்கிறார்கள்.

வேதாந்த நாயகி

மகா மண்டபத்திற்குள் தெற்குத் திசை நோக்கி தனிச் சந்நிதியில் வேதாந்த நாயகி அம்பாள் வேறெங்கும் காணக்கிட்டாத காட்சியாக வலது காலை எடுத்து வைத்து முன்னோக்கி வந்து நம்முடன் பேசுவதுபோல் உதடுகள் குவிந்த நிலையில் அம்பாள் தோற்றத்தில் அருள்புரிகிறாள். இந்த அம்பாளுக்கு வெள்ளிக்கிழமைகளில் குங்கும அர்ச்சனை செய்து வழி பட்டால் திருமணத்தடை நீங்கும் என்பது ஐதீகம்.

பைரவர்

அம்பாள் சந்நிதிக்கு அருகில் சாந்த பைரவர் என்று சிறிய உருவிலும் மகா பைரவர் என்று சுமார் ஐந்தடி உயரத்தில் பெரிய உருவிலும் ஒரே சந்நிதியில் இரண்டு பைரவர்கள் காட்சி தருகின்றனர். ஒரே கோவிலில் இரண்டு பைரவர் இருப்பதும் இங்கேதான்.

சனிபகவான்

இந்த இரண்டு பைரவர் சந்நிதிக்குப் பக்கத்தில் சனி பகவான் காக்கை வாகனத்துடன், ஈசனை பிடிப்பதற்குரிய நேரம் நெருங்கி விட்டதால் இடுப்புக்குக் கீழே இடக்கையை வைத்தபடி ஒய்யாரமாக மேற்கு நோக்கி இறைவனை பார்த்த வண்ணம் காட்சி தருகிறார்.

காசி விஸ்வநாதர்

இங்கு வந்த 12 ஜோதிர்லிங்கங்களில் காசி விஸ்வநாதர், விசாலாட்சியுடன் அங்கேயே தங்கிவிட்டார். அந்தச் சந்நிதி மகா மண்டபத்தில் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ளது.

தட்சிணாமூர்த்தி

ஆலயத்தின் தெற்குப் பகுதியில் உள்ள சந்நிதியில் ஸ்ரீதட்சிணாமூர்த்தி காட்சி தருகிறார். இவர் சீடர்கள் யாருமின்றி காளை வாகனத்தில் அமர்ந்து நிருதி திசையை நோக்கி அருள்புரிகிறார். இவரை அன்னதான தட்சிணாமூர்த்தி என்பர். இவரை தரிசித்தால் சாபங்கள் நீங்கும்; கல்வி ஞானத்தில் சிறந்து விளங்கலாம். இவருக்கு தினமும் பழைய சோறு (தண்ணீர் ஊற்றி வைத்த முதல் நாள் சோறு) படைக்கப்படுகிறது. இவரை மனதார வழிபட்டால் பசித்த நேரத்தில் உணவு கிடைக்கும் என்கிறார் கோவில் குருக்கள்.

முருகன் - மஹாவிஷ்ணு

இக்கோவிலின் வடமேற்குப் பகுதியில் வள்ளி தெய்வானையுடன் முருகப்பெருமான் அருள்புரிகிறார்.

வடபுறம் நான்முகன் உள்ள இடத்தில் மகாவிஷ்ணு உள்ளார். இவர், நவராத்திரி விழாவின்போது தன் மாப்பிள்ளையான சிவபெருமானையும் தன் தங்கையான வேதாந்த நாயகியையும் சீர்வரிசை கொடுத்து, தன் கோவிலுக்கு அழைத்துச் செல்வாராம். இந்தச் சிவாலயத்திற்கு அருகில் பெருமாள் கோவில் உள்ளது. இந்தப் பெருமாள் கோவிலில் நவ ராத்திரி விழா நடைபெறும் பொழுது, கடைசி நாள் சிவதம்பதியர் அங்கே வருகை தருவது வழக்கமாம். அவ்வாலயத்திலுள்ள பெருமாள் இங்கு வந்து சீர்வரிசை கொடுத்து அழைத்ததன் அடையாளமாக இங்கு வடக்குக் கோஷ்டத்தில் எழுந்தருளியுள்ளார்.

அவருக்கு அருகில் ஸ்ரீசண்டி கேஸ்வரர் சந்நிதி உள்ளது. இங்கு இரண்டு சண்டிகேஸ்வரர்கள் அருள் புரிகிறார்கள். ஒருவர் பெரிய அளவில் தெற்கு நோக்கியும் இன்னொருவர் சிறிய திருவுருவில் கிழக்கு நோக்கியும் உள்ளனர். சண்டிகேஸ்வரர் சந்நிதிக்கு அருகில் கோஷ்டத்தில் நான்கு கரங்கள் கொண்ட விஷ்ணு துர்க்கை எழுந்தருளியுள்ளாள். அம்பாள் சந்நிதியின் பின்புறம் வடக்கு கோஷ் டத்தில் எட்டு கரங்கள் கொண்ட துர்க்கை காட்சி தருகிறாள். இந்த இரு துர்க்கைகளும் திரிபங்க நிலையில் நின்று வடமேற்கு திசையை நோக்கிக் காட்சி தருகிறார்கள்.

ராகு கேது

இத்திருக்கோவிலில் ராகு பகவானும் கேது பகவானும் ஒரே இடத்தில் அருள் புரிகின்றார்கள் . வேறு எங்கேயும் இப்படி இருவரும் ஒன்றாக இணைந்து காட்சி தருவது இல்லை. ஒரே இடத்தில் இருவரையும் வணங்கும் படி ஒற்றுமையோடு அருள்கின்றனர்.

நவக்கிரகங்கள்

இங்குள்ள நவகிரகங்கள் அனைத் தும் நடுவில் உள்ள சூரியனை நோக்கியே உள்ளன. காலை சூரிய கதிர்கள் தினமும் இறைவன் மேல் விழுவதாக சொல்கின்றனர், அதனால் கிழக்கு பக்க இரும்பு கதவினை பக்தர்களுக்கு திறப்பதில்லை.

தலமரம் - தீர்த்தம்

இத்திருக்கோவிலின் தலமரம் வன்னி. தலத் தீர்த்தம் பிரம்ம தீர்த்தம். இது கோவிலின் கிழக்குப் பகுதியில் உள்ளது.

நாகம் வந்து வழிபடுகிறது

2011 சூரிய கிரகணத்தின்போது ஒரு பெரிய நாகம் வந்து தலமரமான வில்வத்தில் ஏறி, வில்வதளத்தைப் பறித்து வாயில் கவ்விக் கொண்டு, கோமுகத்தின் வழியாக நுழைந்து சிவலிங்கத்தின்மீது ஏறி வில்வ தளத்தை வைத்தபின், திரும்பி சென்றதாக கண்டவர் படமெடுத்தவர்கள் சொல்கின்றனர்.

பக்தர்களுக்கு பிரதோஷகாலத்தில் மட்டும் வேதாந்தநாயகி சமேத விஸ்வநாத சுவாமியைத் தரிசித்ததும் பிரசாதமாக வில்வத்துடன் ருத்ராட்சம் ஒன்றும் கொடுக்கிறார்கள்.

•

பாராட்டுக்கள்

திருச்சி மாவட்டம் முசிறி வட்டம் தாத்தையங்கார்பேட்டையைச் சேர்ந்த திரு. **V.சுந்தரவேலு செங்குந்தர் -** திருமதி **வனிதா** ஆகியோரின் குழந்தைகள் **S.கிஷோர்** மற்றும் **S.மோகனப்பிரியா** ஆகியோர் GO4GURU என்ற தனியார் நிறுவனம் இணையம் வாயிலாக நடத்திய "INTERNATIONAL SPACE SCIENCE COMPETITION - 2020" தேர்வில் வெற்றி பெற்று சிறந்த திறனாளராகத் தேர்வு செய்யப்பட்டு மே மாதம் அமெரிக்காவிலுள்ள நாசா விண்வெளி மையத்தைப் பார்வையிடவும், அங்கு நடைபெறும் சர்வதேச விண்வெளி மாநாட்டில் கலந்து கொள்ளவும் வாய்ப்பு பெற்றமைக்கு தெ.செ.ம.சங்கத்தின் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திங்கள் ஒரு திருக்குறள்

அரசியல்



இறைமாட்சி

(அரசனது பெருமை)

381

படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு.	ஆற்றல்மிக்க படை,நல்லகுடிகள்,பொருள்வளம், அறிவுசான்ற அமைச்சர்கள்,உயர்ந்த நண்பர்கள்,நாடுகாக்கும் அரண்-அரசின் அங்கங்கள் ஆன இவை ஆறும் நிறையப்பெற்றவன் அரசருள் சிங்கம் போன்றவன்.

கருத்தோவியம்: சிவன்மலை பித்தன் **நடராசன்**

வேலூர் மாவட்டம் சத்துவாச்சாரி மாநகரில் 3-02-2020 திங்கட்கிழமை ஸ்ரீ கெங்கை அம்மன் கோயில் வளாகத்தில் முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணாதுரை அவர்கட்கு 51ஆம் ஆண்டு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக சத்தவாச்சாரி செங்குந்த சமுதாய கமிட்டி பொருளாளர் திரு. S.வேதகிரி மற்றும் சத்துவாச்சாரி விஜயதசமி இலக்கிய விழா குழு தலைவரும் மற்றும் சத்துவாச்சாரி மேல்நிலைப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவருமான திரு.R.ஜெயராமன் Ex.MC., அவர்களால் சிறப்பு சொற்பொழிவு ஆற்றி சிறப்பித்தார்கள். விழாவில் சங்கத் தலைவர் திரு.M.மார்கபந்து அவர்களின் வரவேற்புரையும், கிளைச் சங்க செயலாளர் திரு.M.சுதாகர் நன்றியுரையும் மற்றும் சங்க நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

வாழ்த்துக்கள்

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. **ஈஸ்வர் செங்குந்தர்** அவர்களின் மகள் செல்வி **சுபாஷினி** அவர்கள் 2018 - 19ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் இந்திய ஆட்சிப் பணி தேர்வில் அகில இந்திய அளவில் 229 இடமும், மாநில அளவில் மூன்றாவது இடமும் பெற்று **I.A.S.** அதிகாரியாக தேர்வு பெற்று உத்தரகாண்ட் மாநிலம் முசௌரி இலால்பகதூர் சாஸ்திரி இந்திய ஆட்சி பணி பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று வருகின்றார்.

நம்ம வீட்டுக் கல்யாணம்

07-02-2020 வெள்ளிக்கிழமை அன்று திருவண்ணாமலை மாவட்டம் தேவிகாபுரத்தில் நடைபெற்ற மகாராஷ்டிரா செங்குந்த மகாஜன சங்கத்தின் அமைப்பாளர் திரு. **V. தயாளன் செங்குந்தர்** - திருமதி.**தெய்வானை அம்மாள்** ஆகியோரது மகன்

D. உதயகுமார் (எ) சங்கர் – P. ராதா B.A., ECO

07-02-2020 வெள்ளிக்கிழமை அன்று வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் நடைபெற்ற வேலூர் மாவட்ட செ.ம.சங்கத்தின் தலைவர் திரு. **C.N. தட்சணாமூர்த்தி செங்குந்தர்** அவர்களின் சகோதரர் திரு. **C.S. விநாயகர்** - திருமதி.**சாந்தி** ஆகியோரது மகன்

V. பாலமுருகன் M.B.A.,– **G. பாரதி** B.A.,B.Ed.,M.A.,

ஆகியோரது திருமணத்திற்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நம்ம வீட்டுக் கல்யாணம்

07-02-2020 வெள்ளிக்கிழமை அன்று திருவண்ணாமலை மாவட்டம் வடமாதிமங்கலத்தில் நடைபெற்ற இளைஞரணி திரு. **S. தாமோதரன் செங்குந்தர்** அவர்களின் சகோதரியும் திரு. **S. சேகர் செங்குந்தர்** - திருமதி.**மலர்க்கொடி** ஆகியோரது மகளுமாகிய **S. பூங்கொடி** B.C.A., – **D. முருகன்** DEEE.,

06-03-2020 வெள்ளிக்கிழமை அன்று திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் நடைபெற்ற சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் திரு. **E.S.S. ராமன் செங்குந்தர்,** திரு. **E.S.T. மூர்த்தி செங்குந்தர்** அவர்களின் சகோதரர் திரு. **E.S.T. பக்தவச்சலம்** - திருமதி. **E.T.D. திலகவதி** ஆகியோரது மகன்

E.T.B. சத்தீஷ்குமார் – D. வீணா

ஆகியோரது திருமணத்திற்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

2020
ஏப்ரல்
மே
ஜூன்

தலைவரின்
சுற்றுப்பயண விபரம்

ஏப்ரல் 2020

19.04.2020 – ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணி
முப்பெரும் விழா
– **கள்ளக்குறிச்சி**

26.04.2020 – ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணி
திருநெல்வேலி மாவட்ட
துணைச் செயலாளர்
திரு.சோலை மணியன் செங்குந்தர்
இல்லத் திருமண விழா
– **திருநெல்வேலி.**

26.04.2020 – ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணி
திரௌபதி அம்மன் ஆலய கும்பாபிஷேகம்
– **சங்கரன்கோவில்**

26.04.2020 – ஞாயிற்றுக்கிழமை மாலை 6:00 மணி
விழுப்புரம் மாவட்டச் செயற்குழு
உறுப்பினர் திரு.D.பிரேம்குமார்
செங்குந்தர் மகள் மங்கைப் பருவ
மங்கல நன்னீராட்டு விழா
– **கிடார்**

ஜூன் 2020

24.06.2020 – புதன்கிழமை காலை 7:00 மணி
திரு. S.கருணாநிதி செங்குந்தர் மகன்
திருமண விழா
– **அருப்புக்கோட்டை.**

வாரியார் அமுத மொழி

- துன்பம் இல்லாமல் இன்பமாக வாழ விரும்பினால், மனதால் கூட அடுத்தவருக்கு தீங்கு நினைக்கக் கூடாது.
- மனதை அடக்கி வைப்பது தான் உலகின் கஷ்டமான காரியம்.

திருமண பதிவுக் கட்டணம்

சென்னை தலைமைச் சங்க அலுவலகத்தில் திருமணத் தகவல் மையத்தில் 1 வருட ஜாதக பதிவுக் கட்டணம் - ரூ.500/-

PRESS & REGISTRATION OF BOOKS ACT
The Registration Of Newspapers (central) Rules, 1956
FORM IV (SEE RULE 8) Statement about
Ownership & other particulars about Newspaper

SENGUNTHA MITHIRAN

1. Place of Publication	58, Armenian Street, Chennai - 600 001.
2. Periodicity of its Publication	Monthly
3. Printer's Name	T.Parvathi
Nationality	Indian
Address	Arul Vinayaga Fine Arts, 5/158, Samipuram Colony, Sivakasi - 626 189.
4. Publisher's Name	K.P.K.Selvaraj
Nationality	Indian
Address	58, Armenian Street, Chennai - 600 001.
5. Editor's Name	K.P.K.Selvaraj
Nationality	Indian
Address	58, Armenian Street, Chennai - 600 001.
6. Name and address of individuals who own the newspaper holding More than one per cent of the total capital.	South Indian Senguntha Mahajana Sangam 58, Armenian Street, Chennai - 600 001.

I, K.P.K.SELVARAJ hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated: **16.03.2020**

Signature of Publisher:
K.P.K.SELVARAJ

செங்குந்த மித்திரன்

RNI No. TNTAM/2000/03982

செங்குந்த மித்திரன் சீரார் இதழ்வாழி
எங்குந்தன் பேர்பரப்பும் ஈடில்லாப் - பொங்குந்தன்
கூத்தர் குலம் வாழி! கோலத் தமிழ் வாழி!
ஏத்துநலம் வாழி இசைந்து
- வாரியார் சுவாமிகள்

மார்ச் 2020 மலர்: 20 இதழ்: 3

ஆசிரியர்:

K.P.K.செல்வராஜ்

சந்தா விபரம்

தனி இதழ் : ரூ. 15/–

1-04-2019 முதல் புதிய விளம்பரக் கட்டண விபரம்

கலர்

முழுப்பக்கம்	:	ரூ. 7,000
பின் அட்டை	:	ரூ.10,000
நடுப்பக்கம்	:	ரூ.18,000

கறுப்பு–வெள்ளை

அரைப்பக்கம்	:	ரூ. 2,000
முழுப்பக்கம்	:	ரூ. 3,500

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

South Indian Sengunthа Mahajana Sangam

எண்.58, (பழைய எண்.89), அரண்மனைக்காரன் தெரு, சென்னை–600001.

அலுவலகம்:

044 – 48653014, 25241431

E-mail: sengunthamithiran@gmail.com
www.sengunthamithiran.com

திருமண உறுதியேற்பு விழா வாழ்த்துக்கள்

05-02-2020 புதன்கிழமை அன்று வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில்
நடைபெற்ற வேலூர் மாவட்ட செ.ம. சங்கத்தின் துணைத் தலைவர்
திரு. **S.D.மைவண்ணன் செங்குந்தர்** - திருமதி. **தேவிகா**
ஆகியோரது மகள், **M.ராஜபிரியா** B.E., – **S. வசந்தராஜ்** B.B.E., M.S.,(UK)
ஆகியோரது திருமண நிச்சயதார்த்த விழா

மணி வயிறு வாய்த்த மங்கைக்கு வாழ்த்துக்கள்

26-02-2020 புதன்கிழமை அன்று திருப்பூர் மாவட்ட தலைமைச் சங்க
செயற்குழு உறுப்பினர் திரு. **ப.முருகேசன் செங்குந்தர்** -
திருமதி. **தி.பாமா** ஆகியோரது மகளும், திரு. **து.மனோஜ்குமார்**
அவர்களின் மனைவியுமான திருமதி. **பிருந்தா மனோஜ்குமார்**

வாழ்க நீ! வளர்க நீ! எம்மான்!

சரித்திரம் படைத்தாய் !
மீண்டும் நீ தலைவனாக வந்து !
சாதனைகள் பல புரிந்துச்
சிகரத்தைத் தொட்டதனால் !
சிறுமதி கொண்டவரைச்
சிறிதும்நீ சீண்டாமல்
சீரிய நெறியில் நடந்தாய் !
சிறப்பினை அடைந்தாய் !

சுக்கிரதசைதான் உமக்கு !
இனி எந்நாளும் !
சூழ்ச்சியாளர்தம் வஞ்சனையைச்
சுக்குநூறாக்கினாய் !
செல்வமே ! செங்குந்தர்குலக் கொழுந்தே !
சீர்மிகு செல்வராசே !
சேரிடம் அறிந்து சேர்ந்தாய் !
சிறப்பினை அடைந்தாய் !

சைதன்யம் ! செங்குந்தர் படை !
உமக்குத் துணைபுரியும் !
சொதப்பிடாமல் இருப்பார்கள் !
உமது சொற்கள்தனை ஏற்று !
சோதனைகள் எவைவரினும்
சாதனையாய் மாற்றிடுவர் !
சௌந்தர்ய புருஷனே ! சௌகரியம் பல புரிவாய் !
செங்குந்தர் நலம் வாழ !

அச்சமின்றி பணியாற்றி
அமைதியுடன் திகழ்பவரே !
குலமுன்னோடிகள் ஆசியுடனன்றி
வாரியார் சுவாமிகளின்
பேரருள் துணையோடு
நாளுமே ! எந்நாளுமே !
வாழ்க நீ ! வளர்க நீ ! எம்மான் !
குந்தர் குல நெஞ்சிலே !

ஆசிரியர் **E.லோகநாதன்,**
மாநில செயற்குழு உறுப்பினர்,
காங்கேயநல்லூர், வேலூர் மாவட்டம்.

தலைமைச் சங்க நிர்வாகிகள் தேர்தல் 2020 - 2023

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் 2020 - 2023 ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகள் தேர்தல் 15.03.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை வள்ளல் சபாபதி மெட்ரிக்குலேசன் பள்ளியில் நடைபெற்றது.

தேர்தல் ஆணையாளர் முன்னாள் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி உயர்திரு. G.K.பாரதி அவர்கள் துணை ஆணையாளர்கள் ஓய்வு பெற்ற காவல்துறை கண்காணிப்பாளர் திரு. A.சந்திரசேகரன் அவர்கள், பட்டயக் கணக்காளர் திரு. M.சிவக்குமார் அவர்கள், ஆகியோர்கள் முன்னிலையில் தேர்தல் நடைபெற்றது.

முன்னதாக 14.03.2020 சனிக்கிழமை அன்று காலை 10.00 மணி காலை 11.00 மணி வரை வேட்பு மனுக்கள் வழங்கப்பட்டது. போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் பெறப்பட்டு பரீசிலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. வேட்பு மனு வாபஸ் பெற்றதும் மதியம் 3.00 மணிக்கு இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

தலைவர் பதவி வேட்பாளர்கள் :

1. திரு. K.P.K.செல்வராஜ், திருப்பூர்
2. திரு. S.அருணோதயம், தென்காசி

பொதுச்செயலாளர் பதவி வேட்பாளர்கள்:

1. திரு. R.P.குமரகுருபரன், விழுப்புரம்
2. திரு. K.S.செல்வராஜ் (எ) கந்தமுத்துசாமி, தூத்துக்குடி

பொருளாளர் பதவி வேட்பாளர்கள் :

1. திரு. R.காந்தி மதுரை
2. திரு. V.சிவா திருவண்ணாமலை

துணைப்பொதுச்செயலாளர் பதவி வேட்பாளர்கள் :

1. திரு. K.சுந்தரமூர்த்தி, திருவாரூர்
2. திரு. D.ஆறுமுகம், சென்னை

துணைத் தலைவர் வேட்பாளர்கள்:

தொகுதி 1

1. திரு. C.N.தட்சணாமூர்த்தி, குடியாத்தம்
2. திரு. M.K.சுந்தரமூர்த்தி, செங்கல்பட்டு

தொகுதி 2

1. திரு. மெட்டல் M.மணி, திருச்சி
2. திரு. P.K.இரத்தினசபாபதி, கடலூர்

தொகுதி 4

1. திரு. பாலதண்டபாணி, நாமக்கல்

தொகுதி 5

1.திரு. C.காத்திகேயன், கேரளா

2. திரு. P.G.செல்வராஜ், ஆந்திரா

செயலாளர் பதவி வேட்பாளர்கள் :

தொகுதி 1

1. திரு. சீனி. கார்த்திகேயன், திருவண்ணாமலை

2. திரு. T.K.P.செல்வம் இராணிப்பேட்டை

தொகுதி 3

1. திரு. க.பாலசுப்ரமணியம், சிவகங்கை

2. திரு. பொன்.சக்திமோகன், விருதுநகர்

தொகுதி 4

1. திரு. M.உதயசங்கர், ஈரோடு

2. திரு. A.அசோக், கோவை

தொகுதி 5

1. திரு. R.கந்தசாமி, கர்நாடகா

2. திரு. ப.இராஜாக்கண்ணு, புதுச்சேரி

மேற்கண்ட பதவிகளில் துணைத்தலைவர்

தொகுதி 4 ல்
திரு. A.பாலதண்டபாணி அவர்களும்,

தொகுதி 5 ல்
திரு. C.கார்த்திகேயன் அவர்களும்

திரு. P.G.செல்வராஜ் அவர்களும்
போட்டியின்றி
தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

செயலாளர் தொகுதி 5 ல்
திரு. R.கந்தசாமி அவர்களும்
திரு. ப.இராஜாக்கண்ணு அவர்களும்
போட்டியின்றி
தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்

9080769164 K. M. KOIL

வாழ்க வாழ்க செங்குந்தர்!!
வெல்க வெல்க செங்குந்தம்!!
செங்குந்தர் இனத்தின்
ஒரே தலைவர் K.P.K. ஒருவர் மட்டுமே
தலைவர்
தொடரட்டும் உங்கள்
சமுதாயப் பணி....
வாழ்த்தும் செங்குந்தர்கள் !!
Ln.P.R.வீரமணி
மு.மாவ.இ.அமைப்பாளர்
Ln.J.மணிமாறன்
மு.மாவ.இ.அமைப்பாளர்
Ln.P.செந்தில்குமார்
மாவ.இ.அமைப்பாளர்
R.M.R.சூரியா
மாவ.இ.து.அமைப்பாளர்
M.சுத்தானந்தன்
தென்னிந்திய செங்குந்தர் மகாஜன சங்கம் - தஞ்சாவூர் மாவட்டம்

15.03.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் வாக்குப் பதிவு தொடங்கியது.

மொத்த வாக்காளர்கள் 258

பதிவான வாக்குகள் 244.

மாலை 5.00 மணிக்கு வாக்குகள் எண்ணப்பட்டு கீழ்க்கண்டவாறு தேர்தல் முடிவுகள் ஆணையாளர்களால் அறிவிக்கப்பட்டன.

வெற்றிபெற்ற வேட்பாளர்கள் விவரம்

தலைவர் பதவி

மொத்தம் பதிவான வாக்குகள்: 244

1. திரு. K.P.K.செல்வராஜ் திருப்பூர் : 148
2. திரு. S.அருணோதயம், தென்காசி : 95

செல்லாதவை : 1

இதில் திரு. K.P.K.செல்வராஜ் அவர்கள் வெற்றி பெற்று தொடர்ந்து மூன்றாவது முறையாக தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பொதுச்செயலாளர் பதவி

மொத்தம் பதிவான வாக்குகள் : 244

1. திரு. R.P.குமரகுருபரன் விழுப்புரம் : 167
2. திரு. K.S.செல்வராஜ் (எ) கந்தமுத்துசாமி தூத்துக்குடி : 77

இதில் திரு. R.P.குமரகுருபரன் அவர்கள் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

பொருளாளர் பதவி

மொத்தம் பதிவான வாக்குகள் : 244

1. திரு. R.காந்தி, மதுரை : 129
2. திரு. V.சிவா, திருவண்ணாமலை : 115

இதில் திரு. R.காந்தி அவர்கள் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.

துணைப்பொதுச்செயலாளர் பதவி

மொத்தம் பதிவான வாக்குகள் : 244

1. திரு. K.சுந்தரமூர்த்தி திருவாரூர் : 170
2. திரு. D.ஆறுமுகம், சென்னை : 74

இதில் திரு. K.சுந்தரமூர்த்தி அவர்கள் துணைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.

துணைத் தலைவர் பதவி

தொகுதி 1

மொத்தம் பதிவான வாக்குகள் : 48

1. திரு. C.N.தட்சணாமூர்த்தி, குடியாத்தம் : 25
2. திரு. M.K.சுந்தரமூர்த்தி, செங்கல்பட்டு : 23

இதில் திரு. C.N.தட்சணாமூர்த்தி அவர்கள் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

தொகுதி 2

மொத்தம் பதிவான வாக்குகள் : 58

1. திரு. மெட்டல் M.மணி, திருச்சி : 35
2. திரு. P.K.இரத்தினசபாபதி, கடலூர் : 23

இதில் திரு. மெட்டல் M.மணி அவர்கள் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

செயலாளர் பதவி

தொகுதி 1

மொத்த வாக்குகள் : 48

1. திரு. சீனி. கார்த்திகேயன், திருவண்ணாமலை : 36
2. திரு. T.K.P.செல்வம், இராணிப்பேட்டை : 12

இதில் திரு. சீனி.கார்த்திகேயன் அவர்கள் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

தொகுதி 3

பதிவான வாக்குகள் : 52

1. திரு. க.பாலசுப்ரமணியம், சிவகங்கை : 31
2. திரு. பொன்.சக்திமோகன், விருதுநகர் : 21

இதில் திரு. க.பாலசுப்ரமணியம் அவர்கள் செயலாளராகத் தேர்ந் தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

தொகுதி 4

மொத்த வாக்குகள் : 45

1. திரு. M.உதயசங்கர், ஈரோடு : 26

2. திரு. A.அசோக், கோவை : 19

இதில் திரு. M.உதயசங்கர் அவர்கள் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

மாலை 6.00 மணியளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் திரு. U.V.சடையப்பன் அவர்கள் தலைமையில் பதவியேற்றுக் கொண்டார்கள்.

வெற்றிபெற்ற நிர்வாகிகள் அனைத்து செயற்குழு உறுப்பினர்களுக்கும் நன்றி கூற தேர்தல் நிகழ்வுகள் இனிதே நிறைவு பெற்றது.

எண்ணற்ற சிறப்பில்
ஏப்ரல் மாதம்!

அள்ளிவரும் கல்வியினை ஆழ்ந்து கற்க
அவசியமாய் சென்னையில் திறந்தார் பள்ளி,
வள்ளலான சபாபதியார் வேட்கை மிக்கோர்
வடிவமைத்தார் வளம்சேர்த்தார் வாழ்வு தந்தார்,
நல்லவர்கள் நம்குலத்தில் பிறந்த தாலே
நாமுமிங்கு அவர்வழியில் நன்மை சேர்ப்போம்,
துள்ளிவரும் தமிழாலே வாழ்த்துச் சொல்வோம்,
தொடர்கின்ற புகழ்வழியில் தொண்டு செய்வோம்.

கைத்தறியின் காவலராய்க் காலம் தந்த
கருணையின் நம்பத்மஸ்ரீ நாச்சி முத்து
வையகத்தில் இவர்போல வந்த தில்லை,
வறுமையில் நெசவாளர் வாட்டம் போக்க
செய்திட்ட சாதனைகள் சான்று கூற
செங்குந்தர் நலமதனைச் செயலில் ஈந்தார்,
பொய்யில்லை உண்மைதான் புரிந்து கொள்வீர்,
போற்றியேநாம் வணங்கிடுவோம் பெருமான் வாழ்க!

பகுத்தறிவுப் பாதையில் பயணம் செய்து
பைந்தமிழின் வளர்ச்சிக்குத் தொண்டு மாற்றி,
தொகுத்தளித்த நூல்களிலே தமிழன் ஏற்றம்
தொடர்ந்திங்கு வந்திடவே துணிந்து நாளும்
பகுத்துண்டு வாழ்வதற்கும் பாதை கண்ட
பாவேந்தர் பிறந்ததாலே பலனும் பெற்றோம்,
வகுத்திட்ட கொள்கைக்கு வளமும் சேர்த்து
வாழ்ந்திட்ட புரட்சியாளர் புகழும் வாழ்க!

தென்னகத்தில் பூபாளம் இசைக்க வந்த
தேர்ந்தநல்ல மரபினராம் தரணி போற்றும்
தென்னிந்தி யசெங்குந்தர் மகாசன சங்கம் ,
தோற்றுவித்த மாதமுமோ ஏப்ரல் ஆகும்,
எண்ணிசில ஆண்டுகளில் ஏற்றம் பெற்று
எழுகதிராய் உலகெங்கும் ஒளியை வீசி,
மண்ணிலிங்கு மகத்தான சக்தி யாக
மலர்ந்துவரும் செங்குந்தர் சங்கம் வாழ்க!

கவிஞர். அ.முத்துசாமி, தாரமங்கலம்.

செங்குந்தர்களால் நடத்தப்பட்ட திருவிழாக்கள்

07.02.2020 வெள்ளிக்கிழமை மற்றும் 08.02.2020 சனிக்கிழமை திருப்பத்தூர் மாவட்டம் காந்திப்பேட்டை **ஸ்ரீ தீபாஞ்சியம்மன் ஆலய தீமிதி திருவிழா**

08.02.2020 சனிக்கிழமை அன்று திருப்பத்தூர் மாவட்டம் ஆதியூர் **ஸ்ரீ வள்ளி தேவ சேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் 46 ஆம் ஆண்டு தைப்பூச உற்சவ விழா**

20.02.2020 தென்காசி மாவட்டம் வடக்கு அய்வாய்ப்புலிபட்டி செங்குந்த முதலியார் சமுதாயத்திற்குப் பாத்தியப்பட்ட **அருள்மிகு ஸ்ரீ செல்வமஹா கணபதி திருக்கோவில் புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா**

03.03.2020 செவ்வாய்க்கிழமை அன்று விழுப்புரம் மாவட்டம் கெடார் கிராமத்தில் கேட்டதைக் கொடுக்கும் **அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சூரம்சம்ஹார திருவிழா**

05.03.2020 வியாழக்கிழமை அன்று திருச்சி மாவட்டம் தாத்தையங்கார்பேட்டை **அருள்மிகு பாப்பாத்தி அம்மன், அருள்மிகு ராசாத்தி அம்மன் திருக்கோயில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா**

06.03.2020 வெள்ளிக்கிழமை முதல் **10.03.2020** செவ்வாய்க்கிழமை வரை ஈரோடு மாவட்டம் சிவகிரி **அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில் மாசி மகம் பொங்கல் பெருந்திருவிழா**

08.03.2020 ஞாயிற்றுக்கிழமை முதல் **10.03.2020** செவ்வாய்க்கிழமை வரை நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு சூரியம்பாளையம் **அருள்மிகு ஸ்ரீ பெரியாண்டிச்சி அம்மன் மேற்குவலசு பங்காளிகள் குல தெய்வ முப்பூஜை திருவிழா**

12.03.2020 வியாழக்கிழமை முதல் **18.03.2020** புதன்கிழமை வரை ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடி **அருள்மிகு ராஜராஜேஸ்வரி புதுமாரியம்மன் உற்சவ விழா**

14.03.2020 சனிக்கிழமை அன்று நாமக்கல் மாவட்டம் கொமாரபாளையம் **அருள்மிகு காளியம்மனுக்கு செங்குந்தர் சமூகத்தின் 16ஆம் ஆண்டு காவிரி ஆற்றிலிருந்து தீர்த்தக்குடம் மற்றும் பால் குடம் எடுத்தல் அபிஷேக விழா**

18.03.2020 புதன்கிழமை அன்று திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி **அருள்மிகு இராஜகோபாலசுவாமி பஞ்சமுக அனுமார் உற்சவ பெருவிழாவில் செங்குந்தர் பட்டறையாளர்கள் சங்கம் சார்பில் 5ஆம் நாள் உற்சவம் சுவாமி மரவுரி ராமர் அவதாரத்தில் பவனி வருதல்**

20.03.2020 வெள்ளிக்கிழமை அன்று இராணிப்பேட்டை மாவட்டம் இரத்தினகிரி **அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில் தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள் மெய்ஞானம் பெற்ற 53 ஆம் ஆண்டு விழா மற்றும் அன்னதானவிழா**

26.03.2020 வியாழக்கிழமை அன்று இராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளம் **ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் எனும் ஸ்ரீ பெரிய சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேகம் மற்றும் 96 ஆம் ஆண்டு குருபூஜை விழா**

27.03.2020 வெள்ளிக்கிழமை அன்று புதுச்சேரி மாநிலம் முத்தியால்பேட்டை **ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம் பாலஸ்தாபன வைபவ விழா**

செங்குந்தர்கள் நடத்தவிருக்கும் திருவிழாக்கள்

30.03.2020 திங்கட்கிழமை முதல் **06.04.2020** திங்கட்கிழமை வரை மதுரை மாவட்டம், அபிராமத்தில் அபிராமம் அம்பலம் செங்குந்த முதலியார்களால் கட்டப்பட்டதும் பரம்பரை முதலியார்களால் கட்டப்பட்டதும் பரம்பரை டிரஸ்டி பாத்தியமானதுமான **அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பங்குனி உத்திரம் 2ஆம் ஆண்டு திருக்கல்யாண பிரம்மோற்சவ விழா**

06.04.2020 திங்கட்கிழமை அன்று தூத்துக்குடி மாவட்டம் சிவகளை **ஸ்ரீ ஒப்பிலி ஐயனார் திருக்கோயில் பங்குனி உத்திரத் திருவிழா மற்றும் அன்னதானம்.**

22.04.2020 புதன்கிழமை அன்று புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி **அருள்மிகு அங்காள பரமேஸ்வரி ஆலயம் அருள்மிகு மாசாணி அம்மன் ஆலயம் 21ஆம் ஆண்டு சம்வஸ்ஸரா அபிஷேகம் என்ற வருடாபிஷேக விழா, 17ஆம் ஆண்டு திருவீதி உலா, 19ஆம் ஆண்டு திருவிளக்கு பூஜை**

26.04.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று தென்காசி மாவட்டம் சங்கரன் கோவில் செங்குந்தர் சமுதாயத்திற்குப் பாத்தியப்பட்ட ஸபரிவாரஸகித **அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோவில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா**

வாழ்க மணமக்கள்

07.02.2020 வெள்ளிக்கிழமை அன்று கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் நடைபெற்ற திரு.**K.P. முருகேசன் செங்குந்தர்** - திருமதி **செந்தாமரை** ஆகியோரது மகன் **மு.சித்தார்த் – த.கிருத்திகா**

20.02.2020 வியாழக்கிழமை அன்று கும்பகோணத்தில் நடைபெற்ற கூடுவாஞ்சேரி திரு. **K.கந்தசுப்பிரமணியன் செங்குந்தர்** - திருமதி **தமிழ்செல்வி கந்தசுப்பிரமணியன்** ஆகியோரது மகன்
K.பிரகாஷ் B.E.,– **R.S.அக்ஷயா** B.Tech.,

23.03.2020 திங்கட்கிழமை அன்று திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் நடைபெற்ற K.அய்யம்பாளையம் திரு. **D.முருகேஷ் செங்குந்தர்** - திருமதி **தனலட்சுமி** ஆகியோரது மகன்
M.மனோஜ் பிரபாகரன் B.E., – **S.ரீனா** B.Sc.,

மணமக்களுக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற்ற செங்குந்தர்களுக்கு வாழ்த்துக்கள்

G.சுமதி
ஊராட்சி மன்றத் தலைவர்
கபிஸ்தலம்

B.மகாலெட்சுமி
ஊராட்சி மன்ற துணைத் தலைவர்
கபிஸ்தலம்

பா.வள்ளி
ஊராட்சி மன்றத் தலைவர்
அழகன்குளம், இராமநாதபுரம்

கொரோனா

கற்றுத் தந்த பாடங்கள்

1. மரணத்தை ஞாபகம் செய்து உள்ளது.
2. சத்தத்தை ஞாபகம் செய்துள்ளது.
3. காய்கறி உணவுகளை ஞாபகம் செய்துள்ளது.
4. ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்துள்ளது.
5. தகாத உறவுகள் பக்கம் செல்லாமல் தடுத்துள்ளது.
6. சினிமா, கேளிக்கை நிகழ்ச்சிகளை தடை செய்துள்ளது.
7. தர்மம் மட்டுமே நிலைக்கும் என்று உணர்த்தியுள்ளது.
8. இறைவன் ஒருவனுக்கு மட்டுமே இந்த உலகத்தை ஆக்கவும், அழிக்கவும் முடியும் என்பதை ஊர்ஜிதம் செய்துள்ளது.

வெற்றிச்செல்வர் எங்கள் கைத்தறிக் கதிரவன்

இம்முறையும் வெற்றியினை நிறைவாய் பெற்றீர்!
இருமுறையும் தேர்தல்கள் வந்து போச்சு!
மும்முறையும் தலைவரென எங்கும் பேச்சு!
முத்தாக விளைந்திட்ட எங்கள் சொத்து!
வெற்றிகளை வாழ்க்கையிலே குவிக்கும் உங்கள்,
வெற்றிதரும் பயணத்தைத் தொடர்ந்து செய்வீர்!
வெற்றியும்தான் உழைப்புக்குக் கிடைத்த வெற்றி!
வெற்றிகண்டீர்! திக்கெட்டும் முரசு கொட்டும்!

வெற்றியின்மேல் பேராசை கொள்வோர்க் கெல்லாம்,
வெறும்வாயை மெல்லுகிற கதையே சாலும்!
வெற்றிதானே சாதனைகள் புரிவ தற்கு,
வழிதிறந்து நிற்கின்ற வாயில் ஆகும்!
ராவணனால் ராமனுக்குப் பெருமை உண்டு!
ராமனது பெருமைக்கும் மெருகும் உண்டு!
உயரத்தில் பறந்தாலும் ஊர்க்குருவி,
ஒருநாளும் பருந்தாதல் உலகில் இல்லை!

தாங்களொரு திறந்தநிலை நூலே என்பேன்!
தமிழகத்தில் செங்குந்தர் உயர்வாய் வாழ,
தங்களது பழகுமுறை அன்பைக் கூட்டும்!
தக்கவர்கள் யாரென்று புரிய வைக்கும்!
தமிழகத்தில் நீர்செல்லா ஊர்கள் இல்லை!
தலைவரென பறைசாற்றத் தகுதி உண்டு!
தமிழகத்தின் குந்தர்தம் வெற்றிச் செல்வர்
தமிழினத்தார் கண்டெடுத்த வைரமாகும்!

உழைப்பிற்குக் குந்தரென பிறந்துள்ளீர்கள்!
உண்பதற்கு உமக்கென்றும் நேரம் உண்டோ?
மழைகூட ஒருநாளில் குடைபி டிக்கும்!
மலைத்தலுக்கு யார்வந்து குடைபிடிப்பார்?
தழையென்றும் சின்னதுதான் கீரை யாகும்!
தட்டையுள்ள வாழையிலை கீரை ஆமோ!
வாழையிலை ஒருதட்டு! உண்ணு தற்கு!
வாய்ருசிக்க யாருமதை உண்ட தில்லை!

கைத்தறியின் கதிரவனாய்ச் சுற்றி வந்தீர்!
கனவெல்லாம் ஒருநாள்தான் உண்மை யாகும்!
கைத்தறியின் கதிரவனே இன்று நாங்கள்,
கண்டெடுத்த தலைவர்நீர் திருப்பூர் செம்மல்
காலமெல்லாம் குந்தர்க்குத் தலைவ ரென்ற,
நினைவாலே நாளெல்லாம் தொண்டு செய்வீர்!
ஞாலமதில் வாழ்கின்ற செங்குந் தர்க்கு,
ஞாயிறுபோல் வலம்வந்து உயிர்கொடுப்பீர்!

காய்பறித்து உண்ணுநிலை உமக்கு இல்லை!
கனிகள்தான் தலையிடிக்கத் தொங்கும்போது,
காய்பறிக்க கைநீட்டல் உமக்கு உண்டோ ?
காய்தலையும், உவத்தலையும் சமமாய் எண்ணும்,
தாயன்பு உம்மிடத்தில் இருக்கும் போது,
தடுமாற்றம் ஏற்படுதல் எமக்கு இல்லை !
வாயாற வாழ்த்துகின்றேன் வாழ்க வென்றே!
வாழ்நாளின் தலைவரெனச் சான்று கின்றேன்!

துறையூர் புலவர். **மு.அருணாசலம்**

"மழலைகளுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்" பகுதிக்கு தங்கள் இல்லத்தில் உள்ள 10 வயதிற்குட்பட்ட குழந்தைச் செல்வங்களின் புகைப்படங்களை பிறந்த நாளுக்கு 45 நாட்களுக்கு முன்பாக அனுப்பி வைத்தால், செங்குந்தமித்திரனில் வெளியிடப்படும்.

ஏப்ரல் 04



ஆ.சக்திபிரியதர்சினி

பெற்றோர்:

கே.ஆனந்தராஜ் – கே.கார்த்திகா

செய்யாறு.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் செங்குந்தர் மகாஜன சங்கத்தின் புதிய தலைவராக பொறுப்பேற்றுள்ள திரு.**சி.கே.இரவி** மற்றும் **நிர்வாகிகள்** ஆகியோருக்கு தெ.செ.ம.சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்த்துக்கள்

05.03.2020 வியாழக்கிழமை அன்று சென்னை தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற விழாவில் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற D.G.O. தேர்வில் சென்னை திரு. தேவராஜ் செங்குந்தர் மகள் புவனா பிரீத்தி அவர்கள் முதல் மாணவியாக தேர்ந்தெடுக்கப் பட்டு 3 நற்சான்றிதழ்களும், பதக்கமும் தமிழக ஆளுநர் மாண்புமிகு பன்வாரிலால் புரோகித் அவர்கள் வழங்கி கௌரவித்தார்.

மணமகன் தேவை

பெயர் : **பி.ஹரிப்பிரியா**
படிப்பு : M.B.B.S.,
பிறந்த தேதி : 08.10.1993, 10.12 P.M.,
நட்சத்திரம் : புனர்பூசம்
ராசி, லக்னம் : மிதுனம், மிதுனம்
நிறம், உயரம் : சிகப்பு, 152 – 155 செ.மீ.,
பணி புரியும் இடம் : உதவி மருத்துவ அலுவலர், PHC (Asst. Civil Surgeon)
அரசுத் துறை, புதுப்பாளையம்,
திருவண்ணாமலை மாவட்டம்
வருமானம் : 75,000/–மாதம்
தந்தை பெயர் : பிச்சாண்டி, நடேசன்
தாயார் பெயர் : சுமதி சண்முகம்
உடன் பிறந்தோர் : இல்லை
நிரந்தர முகவரி : No.28 (O.No.26), 1st Bharathiyar Street, F5,
Block - II, Mookambigai Flats, Palavanthangal,
Chennai - 600 114
செல் : **99948 17945, 99948 17957**
எதிர்பார்ப்பு : மருத்துவத் துறையில் இருக்கும் நபர்.
மின்னஞ்சல் : npremkumaraliasnp@gmail.com

		கே	ல / சந்
சனி	**இராசி**		
			சு
	ரா	பு செ	சூ கு

	சந் கே		
பு செ	**நவாம்சம்**		சூ
சு		ல / ரா சனி	கு

சனி திசை இருப்பு
15 வருடம் 9 மாதம் 13 நாள்

62/20112/17.03.20

பெயர் : **கு.சுகிர்த்தனா**
பிறந்த தேதி : 08.02.1998 சனிக்கிழமை இரவு 4.15 மணி,
ஈஸ்வர வருடம் தை மாதம் 25ம் தேதி
படிப்பு : B.E., (ECE),
நட்சத்திரம் : திருவாதிரை
ராசி, லக்னம் : மிதுனம், தனுசு
நிறம், உயரம் : சிகப்பு, 152 செ.மீ.,
ஊர் : காட்டுமன்னார்கோயில்
தந்தை பெயர் : கு.குணசேகரன்
தாயார் பெயர் : கு.வாசுகி, இல்லத்தரசி
தந்தை தொழில் : காய்கனி வணிகம்
உடன் பிறந்தோர் : அக்கா 1 திருமணமானவர்
முகவரி : 72, மேல வீதி, உடையார்குடி அஞ்சல்,
காட்டுமன்னார்கோயில் தாலுக்கா,
கடலூர் மாவட்டம்
செல் : **04144 - 261088, 94439 06248**
மின்னஞ்சல் : ksekar0207@gmail.com

சனி			சந்
கே கு செ	**இராசி**		
சூ பு			ரா
ல / சு			

கே செ			
சந்	**நவாம்சம்**		
			சூ பு
சு கு	சனி	ல	ரா

குரு திசை இருப்பு விபரம்
8 வருடம் 8 மாதம் 20 நாள்

05/19912/15 02.20

மணமகன் தேவை

பெயர் : **B.ராணி நிவேதா**

படிப்பு : B.E., (C.S.)

பிறந்த தேதி : 31.08.1992, ஸ்ரீ கொல்லம் 1168ம் ஆண்டு ஆவணி மாதம் 15ம் தேதி திங்கட்கிழமை

நட்சததிரம் : சித்திரை 3ம் பாதம்

ராசி, லக்னம் : துலாம், மேஷம்

நிறம், உயரம் : மாநிறம், 152 செ.மீ.,

பணி : சாப்ட்வேர் என்ஜினியர், சென்னை

வருமானம் : 50,000/–மாதம்

தந்தை பெயர் : R.பாலச்சந்தர்

தாயார் பெயர் : B.தேவகி

உடன் பிறந்தோர் : இல்லை

முகவரி : 277, பெரிய தெரு,
திருநெல்வேலி டவுண் – 627 006

செல் : **99521 13117, 98420 71134**

எதிர்பார்ப்பு : B.E., M.E., IT Company ல் வேலை.

மின்னஞ்சல் : balaaiveda@gmail.com

	ல	செ	கே
	இராசி		
சனி			சூ பு கு
ரா		சந்	சு

	ரா சனி	ல	பு
சு	நவாம்சம்		
			சூ
கு		சந் கே	செ

செவ்வாய் திசை இருப்பு
3 வருடம் 0 மாதம் 10 நாள்

06/19913/15.02.20

பெயர் : **K.பிரவினா, B.Tech., (IT)**

பிறந்த தேதி : 06.03.1994, ஸ்ரீமுக வருடம் மாசி மாதம் 22ந் தேதி ஞாயிறு காலை 8.30 மணி

பணி : சாப்ட்வேர் துறையில் பணிபுரிகிறார்

நிறம், உயரம் : சிகப்பு , 158 செ.மீ.,

நட்சத்திரம் : மூலம் 3ம் பாதம்

ராசி, லக்னம் : தனுசு, மீனம்

தந்தை பெயர் : M.குபேந்திரன், அரசு ஓட்டுனர் (ஓய்வு)

தாயார் பெயர் : K.சாந்தி, இல்லத்தரசி

உடன் பிறந்தோர் : தங்கை 1 K.கீர்த்தனா, B.E., (Civil),

முகவரி : M.குபேந்திரன், ஓட்டுனர் (ஓய்வு)
97903 21481
3/223A இந்திரா நகர், உள்கோட்டை,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம் – 612 901

செல் : **90030 92397, 97903 21532**

எதிர்பார்ப்பு : B.E., இணையான படிப்பு, நல்ல பணியில் உள்ளவர்.

மின்னஞ்சல் : prakashsp2005@gmail.com

ல சு		கே	
செ சூ சனி	இராசி		
பு			குளி
சந்	ரா	கு	

ல	சூ கு		சந்
	நவாம்சம்		சு ரா
கே			பு குளி
	செ	சனி	

கேது திசை இருப்பு
3 வருடம் 2 மாதம் 29 நாள்

11/19924/22.02.20

மணமகன் தேவை

பெயர் : **N.உமாராணி**

படிப்பு : B.E., (Civil),

பிறந்த தேதி : 23.12.1994 வெள்ளி மாலை 5.35 மணி,
பவ வருடம் மார்கழி மாதம் 8ஆம் தேதி

நட்சத்திரம் : மகம்

ராசி, லக்னம் : சிம்மம், மிதுனம்

நிறம், உயரம் : மாநிறம், 162 செ.மீ.,

பணி : Quantity Surveyer & Laioson Officer,
KCP Engineering Pvt Ltd, Alwarpet, Chennai

வருமானம் : 25,000/–மாதம்

தந்தை பெயர் : S.நடராஜன்

தாயார் பெயர் : N.கமலா

உடன் பிறந்தோர் : S.புவனேஸ்வரி, M.Sc., Phy, M.A., English,
N.ராஜேஸ்வரி, M.E.,

முகவரி : 894, Main Road, Marudur, Ariyalur (Dt) - 621 710

செல் : **96774 17636, 96774 17635**

எதிர்பார்ப்பு : B.E., (or) Equal Qualification, Govt Job (or)
Permanant Private Job.

மின்னஞ்சல் : uma231294@gmail.com

	கே		ல
சனி	**இராசி**		
			செ சந்
சூ பு	கு	ரா சு	

ரா	சு	செ	சூ
	நவாம்சம்		சந்
	ல சனி	கு பு	கே

கேது திசை இருப்பு
1 வருடம் 4 மாதம் 22 நாள்

12/19927/22.02.20

பெயர் : **கா.அருந்ததி**

படிப்பு : B.Com., MBA., Appearing C.A., Inter

பிறந்த தேதி : 08.06.1996, 10.32 A.M., தாது வருடம்

நட்சத்திரம் : சதயம்

ராசி, லக்னம் : கும்பம், கடகம்

நிறம், உயரம் : மாநிறம், 162 செ.மீ.,

பணி : B.Com., MBA., Appearing C.A., Inter
S.சண்முகம், N.C.C. Officer, திட்டக்குடி
94430 45014

தந்தை பெயர் : பா.காமராஜ்

தாயார் பெயர் : ச.சசிஜானகி

உடன் பிறந்தோர் : கா.ஓவியா, B.Sc., (Agri), கா.ஹரிபாலா

முகவரி : 10A, 'பாலபவன்' 4வது குறுக்கு தெரு,
ஜான் தோப்பு, திருச்சி – 2

செல் : **99407 41959, 97906 00122**

எதிர்பார்ப்பு : M.B.A., M.Tech., ME., C.A., Inter, C.A., Final,
நல்ல பணியில் உள்ள வரன் தேவை.

சனி கே		சூ பு செ	சு
சந்	**இராசி**		ல
கு			ரா

சந்			ரா
ல பு செ	**நவாம்சம்**		
			சூ சனி
சு கே		கு	

ராகு திசை இருப்பு விபரம்
3 வருடம் 0 மாதம் 2 நாள்

15/19931/26.02.20

மணமகன் தேவை

பெயர்	: **மு.சிவமதி**
படிப்பு	: B.Sc., (Agri), MBA., (Agri),
பிறந்த தேதி	: 14.03.1993, 11.27 P.M., வியாழக்கிழமை, ஆங்கிரஸ வருடம் மாசி மாதம் 28ஆம் நாள்
நட்சத்திரம்	: சுவாதி
ராசி, லக்னம்	: துலாம், துலாம்
நிறம், உயரம்	: வெள்ளை, 158 செ.மீ.,
பணி	: CEO, Arcot Collective Farmer Producer Company, Arcot, Vellore
வருமானம்	: 33,000/–மாதம்
தந்தை பெயர்	: T.P.முருகேசன், (Electrician)
தாயார் பெயர்	: N.சிவகலை, (Middle School H.M.)
உடன் பிறந்தோர்	: தம்பி 1 மு.சிவநாதன்
முகவரி	: கதவு எண் : TA2, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், ராயக்கோட்டை ரோடு, கிருஷ்ணகிரி – 635 002
செல்	: **70946 91383, 80986 95627**
எதிர்பார்ப்பு	: நன்கு படித்து, நிரந்தர பணியில் உள்ள நல்ல குணங்கள் உடைய வரன் தேவை.
மின்னஞ்சல்	: shivasteynll@gmail.com

	சு	கே	செ
பு சூ	**இராசி**		
சனி			
	ரா	ல / சந்	கு

செ	சு		சூ
ல	**நவாம்சம்**		கு கே சனி
சந் ரா			
பு			

ராகு திசை இருப்பு
0 வருடம் 0 மாதம் 12 நாள்

19/19939/29.02.20

பெயர்	: **Dr.M.பிரியா**
படிப்பு	: B.S.M.S., (Siddha Doctor),
பிறந்த தேதி	: 23.04.1994, சனிக்கிழமை 1.20 P.M., 5096 பவ வருடம் சித்திரை மாதம் 10ஆம் தேதி
நட்சத்திரம்	: உத்திரம் 3ம் பாதம்
ராசி, லக்னம்	: கன்னி, கடகம்
நிறம், உயரம்	: சிவப்பு, 5 அடி 2 அங்குலம்
பணி	: சொந்தமாக கிளினிக் வைத்துள்ளார்.
தந்தை பெயர்	: K.முருகேசன், Chief Manager, in C.P.C.L.,
தாயார் பெயர்	: M.வசந்தி, Asst. Exe. Engineer in P.W.D.
உடன் பிறந்தோர்	: அக்கா 1 திருமணமானவர்
முகவரி	: 95/30, கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை – 600 015
செல்	: **044 - 23813031, 99520 57440**
வாட்ஸ்ஆப்	: **94444 43031**
எதிர்பார்ப்பு	: Doctor or Engineer
மின்னஞ்சல்	: murugesan.chennai@gmail.com

செ	சூ பு மா	சு கே	
சனி	**இராசி**		ல
	ரா	கு	சந்

கு	பு		சூ
ல சந் சனி	**நவாம்சம்**		ரா
சு கே			
		செ மா	

சூரிய திசை இருப்பு விபரம்
2 வருடம் 9 மாதம் 2 நாள்

20/19940/29.02.20

மணமகன் தேவை

பெயர்	: **P.நர்மதா**
படிப்பு	: M.E., (Bio Medical),
பணி	: HCL, Chennai
பிறந்த தேதி	: 11.06.1994 பவ ஆண்டு வைகாசி மாதம் 28ஆம் தேதி சனிக்கிழமை மதியம் 3.30 மணிக்கு நாழிகை 22 வினாடி 26 3/4க்கு சுபஜெனனம்.
நட்சத்திரம்	: திருவாதிரை 4ம் பாதம்
ராசி, லக்னம்	: மிதுனம், துலாம்
நிறம், உயரம்	: சிவப்பு, 5 அடி
தந்தை பெயர்	: S.பாண்டியன், கண்காணிப்பாளர் (ஓய்வு)
தாயார் பெயர்	: P.சீத்தாலெட்சுமி, தலைமையாசிரியர்
உடன் பிறந்தோர்	: அண்ணன் 1 P.நவீன்ஈஸ்வர், M.Tech., Asst.Professor, Thanthai Hans Roever Engineering College, Perambalur – மணமாகவில்லை
முகவரி	: S.பாண்டியன், 37, பெருமாள் கோவில் தெரு, திட்டக்குடி – 606 106, திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்
செல்	: **99444 65222**
எதிர்பார்ப்பு	: உயரம் 5.6 முதல் 5.9 அடிக்குள். Doctor., M.E., M.Tech., படித்த அரசுப்பணியில் உள்ள மணமகன்.

	செ கே	சூ பு	சந் சு
சனி	**இராசி**		
		ல / கு ரா	

சந் கு			சு ரா
	நவாம்சம்		
			சூ
சனி கே	ல	செ	பு

ராகு திசை இருப்பு விபரம் 0 வருடம் 1 மாதம் 27 நாள்

16/

மணமகன் தேவை

Name : **Dr.BHARATHY V SANKAR**

Date of Birth : 20th May 1992, Order of Birth - First. Wednesday 11.45 A.M. Vellore

Star : Pooradam 2 Padham

Rasi : Dhanusu

Qualification : M.D.S. (Completing by May 2020)

Profession : Post Graduate Student, KLE Dental College, Bangalore

Height, Weight, Complxn : 153 Cm (5.0 ft), 50 Kg, Very Fair

Community : Sengunthar

Father Name : Sankar.V. Partner, Protool Industries. Bangalore

Mother Name : Basanthy, Partner, Protool Industries. Bangalore

Siblings : Only Daughter

Residential Address : Shivasakthi Nilaya # 308/20, 5th Cross Prakash Nagar, Bangalore - 560 021

Cell : **94484 72353, 77957 06957**

E Mail : protool@rediffmail.com

Expectation : M.B.B.S., M.D.,/M.S., MDS., BDS., M.E., With good family background

செ	பு சு	சூ	கே
	இராசி		ல
சனி			கு
சந் ரா			

ல			ரா
சூ	நவாம்சம்		கு
			சனி
சு செ கே		பு	சந்

சுக்ர திசை இருப்பு
13 வருடம் 9 மாதம் 8 நாள்

22/19942/29.02.20

பெயர் : **R.ரம்யா**

படிப்பு : B.Tech., (IT),

பிறந்த தேதி : 29.06.1995, வியாழன் மதியம் 2.05 மணி (IST) யுவ வருடம் ஆனி மாதம் 15ம் தேதி

நட்சத்திரம் : புனர்பூசம்

ராசி, லக்னம் : மிதுனம், துலாம்

நிறம், உயரம் : மாநிறம், 5அடி 6 அங்குலம்

பணி : Infosys, (IT), Chennai

வருமானம் : 5,00,000/–வருடம்

